Registered as a News'paper in Sri Lanka    பக்கங்கள் 06    விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 02    ஏப்ரல்    (16 - 04 - 1991)    செவ்வாய்க்கிழமை    ஓசை : 57

## கிழக்கில் சிவில் நிர்வாகம் இராணுவத் தளபதியிடம்

கிழக்கிலங்கையில் சகல நிர்வாக ஒழுங்குகளையும் கவனிப்பதற்காக சிறிலங்கா அரசினால் இராணுவத் தளபதி மேஜர் சிசில் வைத்தியரத்தின நியமிக்கப்பட்டுள்ளார் என இந்திய வானொலி அறிவித்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்த காடுகளில் தாக்குதல்கள் மேற்கொள்ளத் தக்க சிறப்புப் பயிற்சிபெற்ற 1000 இராணுவத்தினரை சிறிலங்கா அரசு அனுப்பப் போவதாகவும் இந்திய வானொலி கூறியது.

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின்

# நான்கு நிமிட தாக்குதல்; ஐந்து சிப்பாய்கள் பலி!

## ஒரு போராளி வீரமரணம், ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவல் அரண் ஒன்றை விடுதலைப்புலிகள் நான்கு நிமிட அதிரடித்தாக்குதலில் அழித்தனர். இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகள் தரப்பில் போராளி காண்டீபன் வீரமரணமடைந்தார்.

நேற்று முன்தினம் முந்திரிகைக்குளம், சிலோன் தியேட்டர் ஆகிய இரு சிறிலங்கா இராணுவ முகாம்களுக்கு மிடையில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ காவல் அரண் ஒன்றின் மீது இரவு 11.20 மணியளவில் அதிரடித் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் நடாத்தி அழித்தனர். சுமார் 15 இராணுவத்தினருக்கு மேல் இருந்ததாக கருதப்படும் இக்காவலரண் மீது சுமார் நான்கு நிமிடங்கள் மட்டுமே மோதல் இடம்பெற்றது. இதில் இருந்த ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மிகுதி இராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலை ஊர்ஜிதப்படுத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மணலாற்றில் புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

முந்திரிகைக்குளத்திற்கும் சிலோன் தியேட்டருக்குமிடையில் இருந்த இராணுவ காவல் அரணில் இருந்து புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்கள் பின்வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி - 1
- ★ மெகசின் - 5
- ★ ஏ. கே. எல். எம். ஜி ரவை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கடந்தவார மோதலில் 70 இராணுவத்தினர் பலி!

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்தவாரம் இடம்பெற்ற தாக்குதல்களில் 70 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 3 இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்துடன் அம்பாறையில்

### அம்பாறையில் 17 சிங்களவர் வெட்டிக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள எஃகுமலை என்ற கிராமத்தில் இனந் தெரியாதோர் நடத்திய தாக்குதலில் 17 சிங்களக் குடியேற்ற வாசிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலை நடத்தியவர்களைக் கண்டு பிடிக்க பாதுகாப்புப் படையினர் முனைப்பான தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### கொழும்பு லொட்ஜில் 31 வடபகுதி இளைஞர் கைது

(கொழும்பு)

கடந்தவாரம் கொழும்பில் உள்ள விடுதி ஒன்றிலிருந்து 31 வடபகுதி இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதன் நள்ளிரவு கொழும்பு செட்டித்தெருவில் உள்ள ஜலன்ட் லொட்ஜில் திடீரெனப் புகுந்த பொலிஸ் கோஷ்டி ஒன்று அங்கு தங்கியிருந்த 31 வடபகுதி இளைஞர்களை விசாரணைக்காகக் கொண்டு சென்றது.

வெளிநாடுகளுக்குச் செல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நிர்வாக சேவைக்கு 245 புதிய நியமனம்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்குப் புதிதாக 245 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளார்கள். இவர்களுக்கான பயிற்சி இலங்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

மன்னார் வவுனியா வீதியில் உள்ள சாளம்பைக்குளம், நிலவன் குளம் பகுதி மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பரீட்சை மண்டபம் மீது வெள்ளை, நீலக் கொடி

(யாழ்ப்பாணம்)

உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலை மண்டபங்களின் மேல் நீல, வெள்ளை நிறக்கொடிகளை பறக்கவிடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் நடைபெறும் போது பரீட்சை மண்டபங்கள் மீது விமானத் தாக்குதல்கள் நடைபெறாது இருப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக யாழ். கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ளது தெரிந்ததே. (ச)

### உயர்தரப் பரீட்சையின் பின்பே சாதாரண பரீட்சை பற்றி முடிவு

(யாழ்ப்பாணம்)

உயர்தரப் பரீட்சை நடைபெற்ற பின்னரே க.பொ.த சா. தரப் பரீட்சையை இங்கு நடாத்துவது பற்றி முடிவு செய்யப்படும் என யாழ். கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்கழி மாதம் வடக்குக் கிழக்குப் பகுதியில் நடைபெறாது தடைப்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையைத் தொடர்ந்து நடாத்தப்படுமா என எமது நிருபர் கேட்டதற்கே பணிப்பாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மட்டக்களப்பில் மூவர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வலுட்டு மாலைச்சோலை என்ற இடத்தில் வைத்துக் கடந்த ஏழாந் திகதி விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பானு (கல்லடி, மட்டக்களப்பு) தேவிராஜ் (ஈச்சந்தீவு மட்டக்களப்பு) சதா (திருப்பழுகாமம் மட்டக்களப்பு) ஆகிய மூன்று போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

### ஆனையிறவில் ஒருவர்

மேலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆனையிறவு முகாமருகே இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் கடந்த பதின்மூன்றாம் திகதி வள்ளல் என்ற போராளி மரணித்துள்ளார்.

### மணலாறில் ஒருவர்

நேற்று முன்தினம் மணலாறு மாவட்டத்தில் இராணுவ காவலரண் மீதான தாக்குதலில் காண்டீபன் (சந்திரகுமார் அலோசியஸ் மார்க் விக்டர் லை, மன்னார்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### வயோதிபர் காயம்

கதிரைக் கெட்ட மரத்தில் ஏறிய வயோதிபர் ஒருவர் தவறி விழுந்து தலையை உடைத்துக் கொண்டுள்ளார். நேற்றுமாலை யாழ்ப்பாணத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பலவருடங்கள் விலைமதிப்பீடு செய்யாததனால்

## யாழ். மாநகர சபைக்கு வருடாந்தம் ஒன்றரைக் கோடிரூபா நட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதி கடந்த பல ஆண்டுகளாக விலைமதிப்புச் செய்யப்படாததனால் மாநகர சபைக்கு வருடா வருடம் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மேல் வருமான இழப்பு ஏற்பட்டு வருகின்றது.

மாநகர சபையின் வரிஇறுவீட்டை மேற் கொள்வதற்காக விலை மதிப்புத்திணைக்களம் 5 வருடங்களுக்கு ஒரு தடவை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளை விலைமதிப்புச் செய்வது வழக்கம். ஆனால் நாட்டு சூழ்நிலை காரணமாகவும் மேற்படி திணைக்களத்தில் போதியளவு வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்தாலும் கடந்த 1974 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்படி பகுதி விலைமதிப்புச் செய்யப்படவில்லை. இறுதியாக மேற்கொள்ளப்பட்ட விலைமதிப்பீட்டு அறிக்கையின்படி யாழ். மாநகரசபை ஒருகோடி எண்பத்திரண்டு லட்சத்து அறுபத்தோராயிரத்து இருநூற்றி நாற்பத்தி இரண்டு ரூபா வரிமூலமான வருமானமாகப் பெற்று வருகின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

பாவித்த சம்போ, ஒயல் விளோன், Gum (கம்) Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9.00 மணிமுதல் 12 00 மணிவரை வாங்கப்படும் எம். சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி. கொழும்பு விருந்தோ பின்புறம் யாழ்ப்பாணம். (B 2169

## நெல்லின் விலையில் வீழ்ச்சி

பூநகரியில் நெல்லின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுறுத்தப் பெருமாள், பச்சைப் பெருமாள் ஒரு மூடை நெல் 850 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

அண்மைக்காலங்களில் ஒரு மூடை நெல் 1000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (24)

## பழமரச் செய்கையில் திணைக்களம் அக்கறையீனம்?

யாழ். மாவட்டத்தில் தற்போது மாமரங்கள் பூவும், பிஞ்சுமாகக் காணப்படுகின்றன இவற்றைத் தாக்கும் மாவிலைத் தத்திகளையும் மற்றைய பீடைகளையும் கட்டுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

முன்னைய வருடங்களில் கமலசேவை திணைக்களத்தினால் பல இலட்சம் ரூபாயில் இறக்குமதி செய்யப்பட்ட பெரியமரங்களுக்கு மருந்து விசிறும் பாரிய தெளிகருவிகளின் மூலம் விவசாயத்திணைக்களத்தின் உதவியோடு மருந்து விசிறப்பட்டது ஆனால் இம்முறை விவசாயத்திணைக்களம் பெரிய மாமரங்களுக்கு மருந்து விசிறுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப் பாரிய தெளிகருவிகளுக்கு என்ன நடந்ததோ தெரியாது முன்பு போல நல்லூர் சாவகச்சேரி, வேலணை, உடுவில் கமநல சேவைநிலையங்களுக்கு இவற்றை அனுப்பிப் பாவனை, பலா போன்ற மரங்களுக்கு மருந்து அடிப்பிக்கலாம். சாடிகளை சொந்தமாக மருந்து அடிப்பிக்கப் பலர் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

இதை மாமரங்கள் பூக்க ஆரம்பித்தவுடன் ஆரம்பித்திருந்தால் மிகவும் உதவியாக இருந்திருக்கும் இப்போதும் காலம் செல்லவில்லை

## 'பாலம்' பணிமனை

(யாழ்ப்பாணம்)

'பாலம்' பொதுப் பணிமன்றத்தின் பணிமனை எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு செல்வன் யோ. சுஹைபாபுவால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்தப் பணிமனை 578, மருத்துவமனை வீதியில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில்

ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு

## பாராட்டு விழா வைபவம்

17-04-1991 காலை 8-30 மணிக்கு
V. K. கானமூர்த்தி — பஞ்சமூர்த்தி
சகோதரர்களின் மங்கள இசையுடன் நடைபெறும்;
பெற்றோர், ஆசிரியைகள், பழைய
மாணவிகள் அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி
அபிவிருத்திச் சங்கம்

(B-1831)

## கிரிக்கட்போட்டி

(மாதகல்)


மாதகல் மயில்வாகனப் புலவர் சனசமூக நிலைய அணிக்கும், சங்கானை யூ பிறவுன் அணிக்கும் இடையில் கடந்த வெள்ளி நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் மயில்வாகனப் புலவர் அணி வெற்றி பெற்றது. இதன் அணியைச் சேர்ந்த ஜெயக்குமார் ஒரு ஓட்டத்தைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதில் செல்வக்குமார் 21 ஓட்டங்களைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## 'எக்ஸ்றே' கருவி பழுதடைந்ததால் மக்கள் அவதி

(மந்திகை)

மந்திகை அரசினர் மருத்துவமனையின் எக்ஸ்றே கருவி பழுதடைந்துள்ளதால் அப்பகுதி நோயாளர் பெரும் சிரமத்திற்குள்ளாகிவருகிறார்கள் இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்தே எக்ஸ்றே எடுக்க வேண்டியுள்ளது. மந்திகை அரசினர் மருத்துவமனையில் இருந்த ஒரே ஒரு எக்ஸ்றே கருவியும் நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் இருப்பது தெரிந்ததே. (ச (25)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
28 - 01 - 1970

அரக்கர் பிடியில்
15 - 04 - 1989

சி. தம்பிராசா
பிரபாகரன்

(ஜீவா)

எமது அருமை ஜீவாவே...
நீ மறைந்து நாளிரண்டு... ஓ...
எம் இதயத்தில் நீ என்றும் மறையவில்லையே...
உன்னை காணும் நாள் வராதா
என ஏங்கி தவிக்கும் போதெல்லாம்
தனிமை பலி பெடுத்தவர்கள்
அந்நிய நாட்டில் பரிதவிப்பார்
இதுவே போதும் எங்களுக்கு
உன் ஆத்மா சாந்தியடைய என்றும்
பிரார்த்திப்போம்.

நாவலடி, அரியாலை.

அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள்.

(B- 2370)

## நினைவு கூருகின்றோம்...

1991-04-16

1985ஆம் ஆண்டு இதே தினத்தில்
வீரமரணமடைந்த

❀ யோகராசா (சேசப்போடி- அக்கரைப்பற்று)

1986ஆம் ஆண்டு நாவற்குழியில் சிறிலங்காப்
படையினருடன் ஏற்பட்ட மோதலின்
போது வீரமரணமடைந்த

கமல் (நமசிவாயகம் கமலநாதன் - நுணாவில்)

இதே ஆண்டு பருத்தித்துறையில் காவல்
கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில்
சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிப்
பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

புலி/பொட்டு (சேதுநாயகம் ரவீந்திரராசா - புலோலி)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

மண்ணின் மீட்பிற்காக
கண் விழித்துக் காத்திருந்தீர்
களத்தில் நீர் காட்டிய வீரம் - எம்
எண்ணத்தில் நிறைந்தது.
இவ் வையம் உள்ளவரை
வாழும் உம் நாமம்.

❀ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் யோகராசா ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2367)

# மாவீரர் நினைவஞ்சலிக் கூட்டம்



கப்டன் ஆனந்த்
(அன்பழகன்)
வீரமரணம்
27 - 03 - 88



வீரவேங்கை
பிரதாப்
(அருணாசலம் மோகன்)
வீரமரணம்
22 - 03 - 91



கப்டன் சண்முகம்
(முத்துக்குமாரு
சண்முகராசா)
வீரமரணம்
12 - 04 - 89



2ஆம் லெப்.
சின்னச்சுதா
அகிலன்
(கதிர்காமநாதன்
சுதாகரன்)
வீரமரணம் 12 - 04 - 89



லெப். அல்பேட்
(மருதப்பு ராஜ்குமார்)
வீரமரணம்
14 - 04 - 89

❀ மேற்படி மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிச் கூட்டம் இன்று மாலை 6-00 மணியளவில் அரியாலை திருமகள் வீதிச்சந்தியில நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகள மக்கள்முன்னணிப் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்; கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அரியாலை பிரதேசக் காரியாலயம், அரியாலை சிற்றூராவைகள். (B- 2372)

# மேநாளும் தமிழீழத் தொழிலாளர்களின் கடமையும்

நிலப்பிரபுத்துவ காலத்திலிருந்து, முதலாளித்துவ காலம் வரை பலநூற்றாண்டுகளாக உழைக்கும் வர்க்கம் தொடர்ந்து அடக்குமுறைக்குள்ளாகி வருகிறது. நிலப்பிரபுத்துவ காலத்தில் பண்ணை அடிமைகளால் ஒருபுறம் உழைக்கும் வர்க்கம் உருக்குலைந்தது. நிலமற்ற விவசாயிகள் குத்தகை என்ற பெயரில்தமது உற்பத்தியில் பெரும்பகுதியைநிலவுடைமையாளரிடம் கொடுத்துவிட்டு தமது உணவுக்காக பண்ணையாளர்களிடமே கையேந்தி நின்றனர் வறிய விவசாயிகள் நிலப்பிரபுக்களிடம் தமது விவசாய முதலீட்டுக்காக பெற்ற பணத்தை பெரு வட்டியோடு திருப்பி அடைப்பதற்கே அவர்களின் உற்பத்தி போதுமானதாக இருந்தது. ஆண்டு முழுவதும் அயராது உழைத்த போதிலும் அவர்களும் உணவுக்குக் கையேந்தும் நிலையில்தான் இருந்தார்கள்.

நிலப்பிரபுத்துவ சமுதாயம் முதலாளித்துவ சமுதாயமாக வளர்ச்சிபெற்ற நிலையில், முதலாளிகளின் ஆலைகளில் கூலித்தொழிலாளர்களாக உழைக்கும் வர்க்கம் தம் உடலை வருத்தி உழைப்பை நல்கியது. தொழிலாளர்களின் கடின உழைப்பினால் முதலாளிகளின் பணப்பைகள் நிரம்பிவழிந்தன, ஆலைகள் வளர்ச்சியுற்றன; பெருகின. ஆனால் நாள்தோறும் 14-15 மணிநேரம் இரத்தமும் வியர்வையும் சிந்தி உழைத்த தொழிலாளர்களுக்குக் கிடைத்த சம்பளம் அவர்களது அரை வயிற்றை நிரப்பக்கூடப் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் ஒவ்வொரு தொழிலாளர் குடும்பத்திலும் கணவன் மனைவி, பிள்ளைகள் அனைவரும் தமது உணவுக்காக உழைக்க வேண்டியிருந்தது. ஆண்களுக்கு நிகரான வேலையைச்செய்த போதிலும் பெண்களுக்கு பாதியானளவு சம்பளமே வழங்கப்பட்டது. சிறுவர்கள் நிலையோ அதைவிடப் பரிதாபம், சக்திக்கு அதிகமான உழைப்பு அவர்களிடமிருந்து உறிஞ்சப்பட்டன.

தொழிலாளர்களின் உழைப்பினால் முதலாளிகளின் பணப்பைகள் நிரம்பின. அவர்களது ஆலைகள் வளர்ச்சியுற்றுப்பெருகின. ஆனால் உழைக்கும் வர்க்கமோ அரைப்பட்டினி நிலையிலிருந்து மீளவேயில்லை. அவர்களுக்கு சுகாதார வசதிகள் மறுக்கப்பட்டன. வசதியற்ற குடில்கள் நாற்றமெடுக்கும் சேரிகளே அவர்களின் வாழ்விடங்களாக இருந்தன. உழைக்கும் நேரங்களில் ஏற்படும் விபத்துகளுக்கு அவர்களுக்கு நிவாரணம் கிடையாது. ஊட்டச்சத்தின்மையாலும், சுகாதாரக் கேடுகளினாலும் உடல்நலக்கோளாறுகள், குழந்தை மரண வீத அதிகரிப்பு என்பவற்றை தொழிலாளர் வர்க்கம் நேரடியாகச் சந்தித்தது. வேலையில்லாத் திண்டாட்டமும் அவர்களை வாட்டியது.

அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் 18ஆம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் பெருவளர்ச்சியினால் ஆலைகள் புதிது புதிதாக உருவாகின. இதனால் வேலையில்லாத்திண்டாட்டம் தொழிலாளர்களிடமிருந்து ஓரளவு அகன்றது. ஆயினும் உழைப்புக்கேற்ற ஊதியத்தை தொழிலாளர்களுக்கு வழங்க முதலாளிகள் முன்வரவில்லை. அதிக உழைப்பை உறிஞ்சி தொழிலாளர்களைத் தொடர்ந்து வாட்டினர்.

மாடமாளிகைகள், அடுக்குவீடுகளை உருவாக்கும் தொழிலாளர்களுக்கு ஒதுங்க ஓலைக்குடிசை கூட இல்லாத நிலை. நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மோட்டார் வாகனங்களை உருவாக்கும் தொழிலாளர்கள் கால்நடை போல அலையும் அவலம். உல்லாச உணவு விடுதிகள் வகைவகையான உணவு சமைக்கும் தொழிலாளி அரைப்பட்டினியில் வாடும் நிலை. இவை உலகெங்கிலும் நீடித்தன.

உழைத்து உழைத்து உருக்குலைவது ஒரு வர்க்கம், அதை நுகர்ந்து பயனடைவது இன்னொரு கூட்டமா? உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் சிந்தித்தது; விழிப்படைந்தது. 14-15 மணிநேரமாக தாம் உழைக்கும் உழைப்பு தமது வயிற்றை நிரப்புவது முதலாளிகளின் பணப்பெட்டிகளை மட்டுமே நிரப்புவதை மாற்றியமைக்க தொழிலாளர்கள் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாரானார்கள்.

நாள்தோறும் 8 மணிநேர வேலை, 8 மணிநேர ஓய்வு, 8 மணிநேர பொழுதுபோக்கு தமக்கு வேண்டும் என்றும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் தொழிலாளர்கள் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிளர்ச்சிகளைத் தொடங்கினர். ஆங்காங்கே வேலை நிறுத்தங்களில் இறங்கினர். தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களினால் ஆலைகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டு தமது உபரி வருமானம் வீழ்ச்சியடைவது கண்டு முதலாளிகள் பதைபதைத்தனர். அதனால் முதலாளிகள் ஒன்றுகூடி தொழிலாளர்களுக்கெதிராக சதித் திட்டம் தீட்டினர்.

தொழிலாளரின் வேலைநிறுத்தங்களை சட்டவிரோதமாக்கும்படி ஆட்சியாளரை நெருக்கினர். முதலாளித்துவத்துக்கு துணைபோய்க்கொண்டிருந்த ஆட்சியாளர் முதலாளிகள் பக்கம் சாய்ந்தனர். வேலை நிறுத்தத்தில் இறங்கிய தொழிலாளர்கள் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். விழிப்படைந்துவிட்ட தொழிலாளர்கள் இவற்றுக்கெல்லாம் அஞ்சாது வேலைநிறுத்தங்கள், கிளர்ச்சிகளைத் தொடர்ந்தனர். அமெரிக்காவின் ஆறு மாநிலங்கள் தொழிலாளர்களின் வேலைநேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க சம்மதித்து 1868 இல் சட்டமியற்றின. முதலாளிகள் திரைமறைவு வேலைகளில் இறங்கினர். அமெரிக்க உச்ச நீதிமன்றம் (சுப்பிரீம் கோட்) மாநிலங்களின் வேலைநேரச் சட்டத்தை சட்டவிரோதமாகத் தீர்ப்பு வழங்கியது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது கண்டு தொழிலாளர்கள் கொதித்தெழுந்தனர். ஆலைகள் தோறும் தொழில் சங்கங்களை அமைத்து தமது உரிமைப்போராட்டத்தை விரிவுபடுத்தினர்.

1886 மே முதலாம் திகதி அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிற்துறை மையங்களில் 8 மணிநேர வேலை நாளுக்கான இயக்கம் தொடங்கப்பட்டது. உழைப்பாளர்களின் எழுச்சி ஒரு புறம், முதலாளிகளின் எதிர்ப்பு மறுபுறம்.

அமெரிக்காவின் 11.562 நிறுவனங்களில் பணி புரிந்த 3 1/2இலட்ச.தொழிலாளர்கள்வேலைநிறுத்தத்தில் குதித்தனர். அமெரிக்காவில் ஆலைகள் இயங்கவில்லை. உற்பத்தி முற்றாக முடங்கியது களத்திலிறங்கிய தொழிலாளர்களில் அரைவாசிப் பேர் 8 மணி நேர வேலையைப் பெற்றனர். ஞாயிறு தோறும் வாரவிடுப்பு, சனிக்கிழமைகளில் 1/2 நாள் வேலை என்பனவும் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டன. உழைக்கும் வர்க்கம் உவகையுற்றது

முதலாளிகளோ பதைபதைத்தனர். பாட்டாளிகளைப் பழிவாங்கி அடக்கி ஒடுக்க முதலாளிகள் ஒன்று கூடி திட்டம் தீட்டினர். பெருமுதலாளிகளின் பத்திரிகைகள் தொழிலாளர்களைத் திட்டித் தீர்த்தன; தொழிற்சங்கத் தலைவர்களைக் காடையர்கள் என வசைபாடின.

மெக்கஸ்மிக் ஆலையில் சம்பள வெட்டு பகுதி நேர வேலை என்பனவற்றை எதிர்த்து மே 3-ம்நாள் வேலை நிறுத்தத்தில் இறங்கிய தொழிலாளர்கள் மீது பொலிஸ்படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 தொழிலாளர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அந்த சம்பவத்தை எதிர்த்து பொலிஸாரைக் கண்டித்து மே நாலாம் நாள் சிக்காக்கோ நகரிலுள்ள ஹேமார்க்கட் சதுக்கத்தில் கண்டனப் பொதுக் கூட்டம் ஏற்பாடாயிற்று. பெண்கள் குழந்தைகள் உட்பட மக்கள் பெருமளவில் அணிதிரண்டனர் பொதுக் கூட்டத்தில் ஆகஸ்ட்ஸ்பீஸ், அல்பேட் பார்சன், சாமுவேல் பீல்டன் என்போர் பொலிசாரின் அராஜகத்தையும் முதலாளிகளின் வெறித்தனத்தையும் கண்டித்து உரையாற்றினர்

சாமுவல்பீல்டன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஜோன்போன்பீல்ட் என்னும் பொலிஸ் அதிகாரி தலைமையில் அங்கு நுழைந்த பொலிஸ் கும்பல் கூட்டத்தைக் கலையும்படி உத்தரவிட்டு அதுவரை அமைதியாக நடைபெற்ற கூட்டத்தில் அமளியை ஏற்படுத்தியது. அதையடுத்து பொலிஸ் பகுதியில் கைக்குண்டு ஒன்று வெடித்தது. ஒரு பொலிஸ்காரன் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டான். மேலும் 5 பேர் படுகாயமுற்று பின்னர் மரணமாயினர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பொலிஸ்கும்பல் மக்கள் கூட்டத்தின் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்திலிறங்கியது ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 200க்கும் அதிகமானோர் காயமடைந்தனர் அதையடுத்து முதலாளிகளின் தூண்டுதலின் பேரில் சிக்காகோ நகர் முழுவதிலுமிருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், தொழிலாளர் தலைவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன

அல்பேர்ட் பார்சன்ஸ், ஆகஷ்ட்ஸ்பீஸ், சாமுவல் பீல்டன் யூஜின் ஸ்லாப், அடால்ப பிஷர், ஜோர்ஜ் எங்கல், லூயிலிங், அங்கர் நீபே ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் 8பேர் மீது ஹேமா க்கட் சதுக்கத்தில் குண்டு வெடிப்பை நிகழ்த்தி பொலிஸ்காரன் ஒருவனைக் கொன்றதாக கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது. வெடிகுண்டு வீசப்பட்ட நேரத்தில் அந்த எண்மரில் பீல்டன் தவிர ஏனையோர் அந்த இடத்தில் இருக்கவில்லை பீல்டன்கூட மேடையில் நின்று உரையாற்றிக் கொண்டிருந்தார் முதலாளிகளின் தூண்டுதலின் பேரில் தொழிலாளர் தலைவர்களான இவர்கள் மீது பொய் வழக்குப் போட்டு அவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

அந்த எண்மரில் எழுவரையே பொலிஸார் கைது செய்தனர் அல்பேட்பார்ன்ஸ் என்னும் தொழிற்சங்கத் தலைவர் நீதிமன்றத்தில் கொலை வழக்கு விசாரணை நடைபெற்ற போது தானாகவே சென்று கலந்து கொண்டார் அந்த வழக்கு விசாரணையின் போது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் சரியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படவில்லை. தொழிலாளர்களை வேம்பென வெறுக்கும் முதலாளிகளை மட்டுமே ஜூரர்களாகக் கொண்ட நீதிமன்றத்தில் நீதியையே கேலி செய்யும் வகையில் விசாரணை நாடகம் நடத்தி முடிக்கப்பட்டு கொலைக் குற்றம் செய்ததாக ஏழுபேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது அங்கர் நீபே என்பவருக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனை தீர்ப்பாயிற்று. இவ்வழக்கிற்கு மறுவிசாரணை மறுக்கப்பட்டது

உலகின் பலபாகங்களிலுமிருந்து இந்த வழக்கின் தீர்ப்பு பற்றி கடும் எதிர்ப்புகளும், விமர்சனங்களும் எழுந்தன உலகெங்கிலும் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. உள்நாட்டிலும் ஏராளமான அறிஞர்கள், பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், தொழிற்சங்கவாதிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது 1887 நவம்பர் 11ஆம் நாள் நான்கு பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய மூவரில் லூயிலிங் என்பவர் சிறையில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார் (அவர் தற்கொலை செய்து கொண்டதாக அறிவித்தனர் பீல்டன், ஸ்லாப் ஆகிய இருவரது மரணதண்டனைகளும் அவர்களினால் ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டது

ஆயுள் தண்டனை பெற்றவர்களை விடுவிக்கக்கோரி தொடர்ந்து பல கிளர்ச்சிகள் நடத்தப்பட்டன. 1893 ஜூன் 26இல் கவர்ணர் அல்கெல்ட் ஆயுள்தண்டனை அனுபவித்த கைதிகள் குற்றம் செய்ததாக நிரூபிக்கவில்லை என்று கூறி அவர்களை விடுவித்ததுடன் மரணதண்டனை வழங்கப்பட்டவர்கள் கூட காழ்ப்புணர்ச்சி கொண்ட நீதிபதியினால் பழிவாங்கப்பட்டு விட்டனர் என்று கவர்னர் பகிரங்கமாக அறிவித்தார்.

தொழிலாளர்களுக்காக இன்னுயிரீந்த இந்தத் தியாகிகளுக்கு 1893 ஜூன் 25இல் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. இவர்கள் ஹேமார்க்கட் தியாகிகள் என அழைக்கப்படுகின்றனர் 1886 மே 4இல் ஹேமார்க்கட் சதுக்கத்தில் நடைபெற்ற குண்டுவீச்சு சம்பவம் ஹேமார்க்கட் சம்பவம் என அழைக்கப்படுகிறது

1886 மே 1இல் 8மணிநேர வேலைக்கான போராட்டம் தொடங்கப்பட்டு 1889இல் பெரு வெற்றி பெற்றது தொழிலாளர்களுக்கான 8மணிநேர வேலையை நிலைநாட்ட உலகளாவிய அளவில் இயக்கம் நடத்துவது என்றும், உலகத் தொழிலாளர்கள் எழுச்சி நாளாக மே ஓராம் நாளை ஆண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் கால்நடை திருட்டு

(மாங்குளம்)

மாங்குளத்தில் கால்நடைகள் திருட்டும் கம்பிக்கட்டைத் திருட்டும் அதிகரித்து வருகிறது

இராணுவ நடவடிக்கையால் இப்பகுதிகளிலிருந்து இன்னமும் வீடு திரும்பாதவர்களது காணி வேலிக் கம்பிக்கட்டைகளையும் அவர்களது கால்நடைகளையும் திருடர்கள் திருடிவருகிறார்கள்.

இதனால் விவசாயத்தையும் கால் நடைகளையும் நம்பி வாழும்மக்கள்பாதிப்படைந்து வருகின்றனர். [82]

## சேவைநலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் ஓய்வுபெற்ற உப அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டுவிழா நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற உள்ளது. பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராஜாவும், சிறப்பு விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி ஏ. தங்கராஜாவும் கலந்து கொள்கின்றனர். ஆசி உரையினை கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நிகழ்த்துவார். கலைநிகழ்ச்சிகளும் மதிய போசனமும் இடம் பெறும்.

## சுப்புலட்சுமிக்கு 'கொனார்க் சம்மான்' விருது

பிரபல கர்நாடக இசை வல்லுநர் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமிக்கு பெருமை மிக்க 'கொனார்க் சம்மான்' விருது வழங்கப்பட்டது. ஒரிசா மாநில கலாசார சபையினரால் வழங்கப்பட்ட இவ்விருது நேற்று முன்தினம் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்கினால் வழங்கப்பட்டது. ஒரிசா மாநில ஆளுநரும் கலந்துகொண்டு வாழ்த்தினர். இந்த விருதுடன் 50,000ரூபா பணமுடிச்சும் வழங்கப்பட்டது.

## களஞ்சியப்படுத்தாமல் சேதமாகும் பொருள்கள்

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான உணவுப் பொருள்கள் முள்ளி வாய்க்கால் இறங்குதுறையிலிருந்து களஞ்சியப்படுத்தாமல் இழுவைப் படகில் இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எட்டு லொறி மா, அரிசி வகைகளை அப்புறப்படுத்த இராணுவக் கூட்டுத் தலைமை அலுவலகம் இன்னமும் அனுமதி வழங்காததால் உணவுப் பொருள்களை களஞ்சியப் படுத்த முடியவில்லை.

இராணுவ தலைமைஅலுவலகத்திடம் அனுமதியைப் பெறுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி எடுத்தும் இதுவரை பயனளிக்கவில்லையென்றும் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (82)

## தமிழீழத்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோறும், உலகெங்கும் கொண்டாட வேண்டும் என்றும் 1889 இல் இரண்டாவது அகிலம் முடிவெடுத்து அதனடிப்படையில் 1890ஆம் ஆண்டு மே ஓராம் நாளிலிருந்து ஒவ்வொரு மே முதல் நாளும் உலகளாவிய அளவில் தொழிலாள எழுச்சிநாளாக உலகத் தொழிலாளர்கள் ஒற்றுமை நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது

நூறு ஆண்டுகளுக்குமுன் 8மணி நேரவேலை நாளைப்போராடிப் பெற்ற தொழிலாளர்கள் அதனையடுத்து மேலும் பல உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் புரிந்த தியாகம், 8 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை கொஞ்ச நஞ்சமல்ல. 8மணி நேர வேலை நாளையடுத்து ஞாயிற்றுக் கிழமை களில் வாரவிடுமுறை, சனிக்கிழமைகளில் அரை நாள் வேலை, சம்பள விடுப்பு, சாப்பாட்டுக்கு இடைநேர ஓய்வு, விபத்துக்களுக்கு இழப்பீட்டுத்தொகை, குறைந்த பட்சம் பள வரம்பு, ஓய்வூதியம், தொழிற்சங்க உரிமை, உழைக்கும் பெண்களுக்கு பேறுக்கால விடுப்பு வசதி, பேறுக்கால உதவி, குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் போன்ற பல உரிமைகளை உலகத்தொழிலாளர்களின் பெரும்பாலானோர் இன்று பெற்றிருக்கின்றனர்.

சோவியத் யூனியன் போன்ற சோசலிச நாடுகளில் தொழிற்சங்கம் உயர்ந்த அதிகார பீடங்களாக இருக்கின்றன- சோவியத் யூனியனில் மக்கள் தொகையில் அரைப்பங்கினர் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர் அங்கு நிர்வாகமும் தொழிற்சங்கமும் சமமாக மதிக்கப்படுகின்றன. தொழிற்சங்கத் தீர்வையே நிர்வாகம் ஏற்றுச் செயற்படும் நிலைமை அங்கு இருக்கின்றது

இந்த வகையில் ஏற்றம்பெற சோவியத் யூனியனில் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் செந்நீர் சிந்தினர்: தம் உயிர்களைத்தியாகம் செய்தனர்; சிறைகளை நிரப்பினர்; சொல்லொணாச்சித்திரவதைகளையனுபவித்தனர் உரிமைப்போர் தொடுத்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு, அடக்குமுறை, பொய்வழக்கு, ஆலைகளில் கதவடைப்பு போன்ற அடக்கு முறைகள் செய்தனர். இவற்றுக்கெல்லாம் பின்னர்தான் அங்கு பாட்டாளி வர்க்க அரசுஉருவாயிற்று.

தொழிற்சங்கச் செயற்பாடுகள், தொழிலாளர் உரிமைகள், தொழிலாளர் கடமைகள் பற்றி தொழில் வளர்ச்சி குன்றிய பின் தங்கிய விவசாய நாடுகளில் உள்ள மக்கள் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

தொழிலாளர் எழுச்சி நாளான மே நாள் என்பது ஆலைத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மூலம் நடத்தும் விழா என்றும் வேலை நிறுத்தம், சம்பள உயர்வு, போனஸ், ஓய்வூதியம் என்பன பற்றி மட்டுந்தான் மே நாளில் குரலெழுப்பலாம் என்றுதான் இங்குள்ள பெரும்பாலான தொழிலாளர்கள் கூட எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

★ உண்மையில் மே நாளென்பது உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்களின் மகத்தான திருவிழா.

★ தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர விடுதலை உணர்வுகளுக்கு வித்திட்டநாள்.

★ தமது வர்க்க உரிமைகளை நிலை நாட்ட, அடிமை விலங்கொடிக்கத் தொழிலாளர்கள் தமது உயிரையும் இழக்கத் தயாரான உணர்ச்சி மிகு திருநாள்.

★ சுரண்டல்களுக்கும் கொடுங்கோன்மைகளுக்கும் எதிராக தமது முன்னேற்றத்துக்கும் மகிழ்ச்சிக்குமான போராட்டத்துக்கு உலகத் தொழிலாளர்கள் அணிதிரண்ட நாள்.

எனவே தொழிலாளர் எழுச்சியை, விடுதலை உணர்வை வெளிப்படுத்தும் நாளாக மே நாளை நாம் கொண்டாட வேண்டும்.

சோவியத் யூனியனில் தொழிலாளர்கள் வெறும் தொழிற்சங்க நடவடிக்கையோடு நில்லாது தொழிலாளர் வர்க்கத்தின் பொதுவான அரசியல் சமுதாய இயக்கங்களிலும் முழுமையாக ஈடுபட்டு செஞ்சேனையில் அணிதிரண்டு பாட்டாளிகளின் ஆட்சியை அங்கு நிறுவினர்.

''தொழிற்சங்கங்கள் ஆலை நிர்வாகத்தை எதிர்த்த உடனடிப் போராட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. அவை தொழிலாளர் வர்க்கத்தின் பொதுவான அரசியல் சமுதாய இயக்கங்களில் இருந்து விலகி நிற்கக் கூடாது'' என்றார் மாமேதை லெனின்.

தொழிலாளர் வர்க்கம் சுதந்திரமில்லாத நிலையில், அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பது அவசியமாகும்.

இலங்கைத்தீவிலும் கடந்த நூற்றாண்டிலிருந்தே தொழிலாளர் நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுவருகின்றன 1919 இல் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களைத் தலைவராகவும் மலையகத் தமிழர் தலைவர் பெரி சுந்தரம் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இலங்கைத் தொழிலாளர் நலச்சங்கம் (Ceylon Workers, Welfare League) என்ற தொழிலாளர் அமைப்பு உருவானது. ஆரம்பத்தில் அந்த அமைப்பில் பணியாற்றிய A.E குணசிங்கா என்ற சிங்களத் தலைவர் சர்வ ஜனவாக்குரிமையையும் மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குரிமையையும் முழுமையாக ஆதரித்தார்.

A.E. குணசிங்கா அரசியல் கட்சி ஒன்றை தொடக்கியதன் பின் வர்க்க நலனை விட இனநலனைப்பற்றியே அக்கறை கொண்டார். இறுதியில் சிங்கள இனவாதத்தைக்கக்கிய அவர் மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது எனக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார். ஆரம்பத்தில் இனவேறுபாடற்ற தொழிலாளர் வர்க்க நலன்களுக்காக குரல் கொடுத்த A.E குணசிங்கா பின்னர் வர்க்க நலன்களை இனவாதத்துக்குப் பலி கொடுத்து இன வெறியைக் கிளப்பினார்.

'' அவ்வாறே, அரசாங்க பணியாளர் சங்கங்களில் அன்று சிறப்புற்று விளங்கிய அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் GCSU பல ஆயிரக்கணக்கான தமிழ் உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும், அச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பல தமிழ் உறுப்பினர்கள் பெரும் சேவையாற்றியிருந்த போதிலும், தமிழர்களை புறக்கணித்து இனவாதத்தைக் கக்கியது.

அச்தொழிற்சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த K.C. நித்தியானந்தா, தொழிற்சங்கப்போராட்டத்தில்பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தன் உயிரைத் தியாகம் செய்த தியாகி கந்தசாமி போன்ற தமிழர்களின் சேவைகளைக் கணக்கிலெடுக்காது, தொழிற்சங்கப் பணிகள் அனைத்தையும் சிங்களத்தில் நடத்தி தமிழ் மொழியைப் புறக்கணித்ததுடன் தமிழ் ஊழியர்களுக்கு எதிராகச் செயற்படவும் ஆரம்பித்தது அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் (GCSU)

தியாகி கந்தசாமியின் உயிர்த்தியாகத்தை வைத்து தொழிற்சங்கத்தை வளர்த்த அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் (GCSU) மட்டுமன்றி இடதுசாரிகளின் ஏனையதொழிற்சங்கங்கள்கூட தியாகி கந்தசாமிக்கு கொலனாவையில் வைக்கப்பட்டிருந்த சிலையை சிங்கள இனவெறியர்கள் உடைத்து சிதைத்த சம்பவத்தைக்கூடக் கண்டிக்காது சிங்கள இன நலனை மட்டுமே பேணும் தொழிற்சங்கங்களாக மாறிவிட்டன,

''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' ''தொழிலாளர்வர்க்கமே ஒன்றுபடு'' என முழங்கியபடி மேதின அணிவகுப்புகளையும், ஊர்வலங்களையும் நடத்திவந்த இடதுசாரிகள் 1965க்குப் பின் தோசை, மசாலவடை, தலத்தெல், (நல்லெண்ணெய்) அப்பிட்ட எப்பா (எங்களுக்கு வேண்டாம்) என்று தமிழ்மக்களைப் புறக்கணித்து தமிழ்மக்களுக்கு எதிராக இனவெறிக்கூச்சலை எழுப்பினர்; தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரேகாரணத்துக்காக பல இலட்சம் மலையகத்தோட்டத்தொழிலாளர்களையும் கைவிட்டு அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டனர். பராளுமன்றத்தின் மூலம் குறுக்குவழியில் பதவிகளைப் பெறுவதற்காக தொழிலாளர் வர்க்க நலன்களைப் புறக்கணித்த இடதுசாரிகள் தடம்புரண்டனர்.

சிங்களத் தொழிலாளர்களோடு இணைந்து செயற்படமுடியாத நிலையில். தமிழ் தொழிலாளர் தமது உரிமைகளை நிலைநாட்ட அமைத்துக்கொண்ட மொழிவழித் தொழிற்சங்கங்களையும் அழித்தொழிக்க சிங்கள ஆட்சியாளரும் ஏனைய சிங்கள தொழிற்சங்க வாதிகளும் திட்டமிட்ட முறையில் செயலிலிறங்கினர். தமிழ்ப்பகுதியில் சிறப்புற செயலாற்றி வேகமாக வளர்ந்துவந்த மொழிவழித் தொழிற்சங்கங்களிலொன்றான இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தை அழித்தொழிப்பதற்காக குறைந்தது 5000 தொழிலாளர்களுக்குக் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் கிடையாது என்று சட்டத்தைக் கொண்டுவந்து அத்தொழிற்சங்கத்துக்கு மூடுவிழா நடத்தினர் சிங்கள ஆட்சியாளர். அதற்கு சிங்களதொழிற்சங்கத் தலைவர்கள் துணைபோயினர்.

ஆரம்பகாலத்திலிருந்து தொழிற்சங்கப்பணியாற்றிய தமிழர்கள் அவமதிக்கப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு தமிழர்கள் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்குக்கூட தடைகள் போடப்பட்டு மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளும் பறிக்கப்பட்டு இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிரான இனவெறி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. வர்க்க முரண்பாடுகளுக்கு மேலாக இன முரண்பாடுகள் தலையெடுத்துள்ளன.

தமிழ் மக்கள் வர்க்க உணர்வோடு செயற்பட்டு தொழிலாளர் வர்க்கத்துக்காக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்த போதிலும் தியாகங்களைப் புரிந்த போதிலும் முற்றியுள்ள இன முரண்பாடுகளினால் தொழிலாளர் வர்க்கம் எண்ணிப் பார்க்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

தவிர, தற்போதைய சூழ்நிலையில் தமிழீழப்பகுதி தொழிலாளர்களின் போராட்ட இலக்கும் வேறுபட்டதாக ஆகிவிட்டது. தொழிலாளர்கள் சம்பள உயர்வு, சலுகைகள், வசதிகள் கேட்டுப் போராடும் நிலை அன்றி, தாம் செய்து வந்த தொழிலையே இழந்துவிட்ட நிலையில் தொழிலுக்காக அவதியுறும் நிலை ஏற்பட்டுவிட்டது,

கட்டிடத்தொழிலுக்கு வேண்டிய சிமெந்து, இரும்புக் கம்பி, மணல் போன்ற மூலப்பொருட்களின்மையால் கட்டிடத் தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

ஆலைகளுக்கு வேண்டிய எரிபொருள்கள், மின்சாரம் மற்றும் மூலப்பொருள்களின்மையால் ஆலைத்தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

விவசாயத்துக்கு வேண்டிய விதைபொருள், உரம், கிருமிநாசினி, எரிபொருட்களின்மையால் விவசாயத்தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

மீன்பிடிக்கச் செல்ல எரிபொருளின்மையாலும், இராணுவத்தாக்குதலினின்றும் பாதுகாப்பின்மையாலும் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல முடியாமல் கடற்றொழிலாளர்கள் அவதியுறுகிறார்கள்.

சிங்கள அரசின் பணமுடக்கத்தினால் தமிழீழப்பகுதியில் பணப் புழக்கம் இல்லாத சூழ்நிலையில், கடற்றொழிலாளர்கள வேலையின்றி அவதியுறுகிறார்கள்.

இவ்வாறு தமிழீழத்திலுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் தமது தொழிலை இழந்து இன்று பட்டினிச்சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழீழத் தொழிலாளர்களில் பெருப்பாலானோர் இன்று தொழிலுரிமைகள் அரசியல் உரிமைகள் உட்பட எந்த உரிமைகளும் அற்றநிலையில், உயிர்வாழ்வதற்கே உத்தரவாதமற்ற நிலையில் நடைப் பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரத் தடையினால் வசதிபடைத்தவர்களும் தொல்லைகளுக்காளாகின்றார்கள்

இலங்கைத் தீவில்வர்க்க முரண்பாடுகளைவிட இனமுரண்பாடுகள் முற்றி விட்டன. சிங்களபாட்டாளிகளைவிட தமிழீழத்தில் முதலாளிகள், பணக்காரர்கள் கூட இன்று பெரும் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி வருகிறார்கள். தொழிலே இல்லாது தமிழீழத் தொழிலாளர்கள் அவதியுறுகின்றனர். இன்று இங்குமலைபோல வளர்ந்துள்ள சிக்கல் தேசிய இனச்சிக்கலே தமிழீழமக்கள் தேசியவிடுதலையை நிலைநாட்டுவதன்மூலமே தம்மீது திணிக்கப்பட்டுள்ள அனைத்து அடக்குமுறைகளை உடைத்தெறிந்து உரிமை பெற்ற இனமாக பெருமையுடன் வாழமுடியும்.

எனவே தமிழீழ மக்களின் இவ்வாண்டு மே நாள் முழக்கமும் சூளுரையும் தமிழீழ விடுதலை நோக்கியதாகவே அமையவேண்டும் மே நாள் கொண்டாட்டங்கள் அனைத்து மக்களின் சுதந்திரத்துக்காகவும் முதலாளித்துவ அடிமைத் தளையிலிருந்தும் விடுவிப்பதற்காகவும் அமையட்டும்.

''உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டு உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கட்டும்''

## ம. கிழக்கிற்கு கப்பல் பயணம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வோர் குறைவான கட்டணங்களைச் செலுத்தி கப்பல் மூலமாக அங்கு செல்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

அனுமதி பெற்ற வெளிநாட்டு முகவர்கள் சங்கம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது. விமானக் கட்டணங்கள் அதிகரித்திருக்கும் நிலையில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச்செல்வோர் குறிப்பாக வளைகுடாப் பிரச்சினையால் தாயகம் திரும்பியோர் திரும்பிச் செல்வதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற் குறிப்பிட்ட சங்கங்கள் இது குறித்து கப்பல் நிறுவனங்களுடனும், தொழில் அமைச்சுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது.

## கல்வி பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கல்வியின் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையிலான விசேட கல்வி அபிவிருத்தித் திட்டம் ஒன்றை யாழ். கல்வித் திணைக்களம் வகுக்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள மேற்படி கல்வி அபிவிருத்தித் திட்டம் மூன்று ஆண்டு காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டதை தயாரிப்பது சம்பந்தமான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று இம் மாதம் 18ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் பிரதம கல்வி அதிகாரிகள் கோட்டக்கல்வி அதிகாரிகள், விசேட கல்வி அதிகாரிகள், பாடப்பொறுப்பலுவலர்கள், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான அதிகாரிகள், பாடப் பொறுப்பலுவலர்கள், கொத்தணி அதிபர்கள் ஆகியோர் கலந்துகொள்வர். (க)

## ஆட்சி அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்படும்

(காபுல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா கிளர்ச்சியாளர்களுடன் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள முன் வந்திருப்பதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க வார இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த நஜிபுல்லா ஆப்கானிஸ்தானில் தேர்தல் நடத்துவதற்காக அரசாங்க தரப்பு மற்றும் கிளர்ச்சிக்காரர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டுக்குழு அமைத்து அந்தக் குழுவிற்கு ஆயுதப்படைகள் மற்றும் சில அமைச்சகங்களின் அதிகாரங்களை வழங்கவும் திட்டமிட்டதாக தெரிவித்தார்.

கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே நல்லெண்ணம் ஏற்படுவதற்காக ஐ. நா. சபையின் மேற்பார்வையாளர்கள் தலைமையில் தேர்தல் நடைபெறலாம் என்றும் நஜிபுல்லா தெரிவித்தார்.

## கைவிடப்பட்ட சைக்கிள்

(ஈச்சமோட்டை)

நேற்று அதிகாலை கொழும்புத்துறைசுவாமியார் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் புதிய ரலி சைக்கிள் ஒன்று நிற்க காணப்பட்டது. பின் இவ்வூர் மக்களால் இச்சைக்கிள் அரியாலை விடுதலைப் புலிகளின் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

(43)

### ❋ சிந்தனைக்கு ❋

உன்னையே நீ உணர்வாய்

— சோக்கிரட்டீஸ்


# ஈழநாதம்

கட, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 16-04-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2303

த.பெ.எண் 03


## வாக்கு வேட்டைக்காக விருப்பியதைக் கூறலாமா?

காஷ்மீர் மாநிலத்தில் இந்தியப் பாதுகாப்புப் படையினர் மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டியுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவரும், முன்னாள் பிரதம மந்திரியுமான ராஜீவ் காந்தி பாதுகாப்பு படையினரின் இம்மனித உரிமை நடவடிக்கை மீறல்களை விசாரிக்க சர்வதேச குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ராஜீவ் காந்தியின் கோரிக்கை வரவேற்கத்தக்கதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும். ஆனால் இவ்வாறானதொரு ஆலோசனையைக் கூறுவதற்கு ராஜீவ் காந்திக்கு என்ன தகுதி இருக்கின்றது என்பதுதான் கேள்விக்குரியது.

இந்தியாவில், பஞ்சாப், காஷ்மீர், அஸாம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இன்று தோன்றியுள்ள ஆயுதப் போராட்டங்கள் எவையும் முன்னாள் பிரதம மந்திரி வி.பி. சிங்கின் ஒன்றரை வருட ஆட்சிக் காலத்தின்போதோ, அல்லது தற்போதைய காபந்துப் பிரதமர் சந்திரசேகரின் நான்குமாத ஆட்சிக்காலத்தின் போதோ, ஏற்பட்டவையல்ல. இந்தியாவின் சுதந்திரத்தின் பின்னர் ஆட்சியை தமது பரம்பரைச் சொத்தாக வைத்திருந்த நேரு குடும்பத்தவரின் ஆட்சியின் போதே ஏற்பட்டவையாகும். அப்பிரச்சினைகளின் ஆரம்பத்தினூடேயே இந்திய இராணுவத்தினரின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளும் ஆரம்பித்துவிட்டன.

அத்தோடு அப்பிரச்சினைகளின் தோற்றுவாய்களுக்கும் காங்கிரஸ் கட்சி ஆட்சியாளர்களே காரணமாக இருந்துள்ளார்கள். இந்திய மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இந்திய புலனாய்வுத் துறையின் "மூன்றாம் ஏஜென்சி" எனப்படும் மிகவும் அந்தரங்கமான அமைப்பே பஞ்சாப், அஸாம் பிரச்சினைகளுக்கு வித்திட்டன எனத் தெரிகின்றது. மாநிலங்களில் இருக்கும் ஆட்சியைக் கவிழ்க்கவும், மத்திய அரசு ஸ்திரமாகவுள்ளது என்பதைக் காட்டுவதற்காகவும் தீவிரவாதத்திற்கு இந்த "மூன்றாம் ஏஜென்சி" ஊக்குவிப்புக் கொடுத்ததாகத் தெரிகின்றது. அதாவது தீவிரவாதிகளைக் கொண்டு மிதவாதிகளை ஒடுக்குதல், அதேவேளை மக்களையும், தீவிரவாதிகளையும் கொன்று மத்திய அரசு பலமான நிலையில் உள்ளது எனக்கூறி மற்றைய மாநிலங்களில் செல்வாக்குத் தேடுதல் என்பதே மத்தியில் இருந்த இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்பாடாக இருந்து வந்துள்ளது. உண்மைநிலை இவ்வாறு இருக்க மனித உரிமைகள் தற்பொழுதுதான் மீறப்படுகின்றன என்ற ராஜீவ் காந்தியின் குற்றச்சாட்டு ஒரு கேலிக்குரியதாகும்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, அவர் மகன் ராஜீவ்காந்தி இவர்களுடைய காலத்தில் இந்தியாவில் ஆயுதப்படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை மறைத்து ஒதுக்கித் தள்ளிவிட்டாலும், ராஜீவ்காந்தி காலத்தில் இலங்கையில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட மனித உரிமைமீறல்கள் பற்றி எதனையும் மறைக்க முடியாது.

சமாதான உடன்படிக்கை ஒன்றின் மூலம் அமைதி காக்கவென இலங்கை வந்த இந்திய இராணுவம் தனது நிலையையே மாற்றி ஆக்கிரமிப்பு இராணுவமாக இரண்டரை வருடத்தில் 6000 க்கு மேற்பட்ட பொதுமக்களையும் 700 க்கு மேற்பட்ட போராளிகளையும் கொன்று குவித்தது. பல்லாயிரக் கணக்கான மக்களை சித்திரவதை செய்தது பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது. கோடிக் கணக்கான தமிழர் சொத்தை அழித்தது / கொள்ளையிட்டது. இவை யாவும் அன்று பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு மனித உரிமை மீறல்களாகத் தெரியவில்லை.

இவ்வாறான மனித உரிமைகளை மீறல் செய்த இந்திய இராணுவத்திற்கு நாடு திரும்பும்போது மகத்தான வரவேற்பும் அளிக்கப்பட்டது அத்தோடு படுகொலைகளைச் செய்த இராணுவத்திற்கு வரவேற்பு அளிக்க மறுத்தமைக்காக தமிழக முதல்வர் கருணாநிதியும் தேசத்துரோகி எனக் குற்றம் சாட்டப்படும் அளவிற்கும் விவகாரம் சென்றது.

இந்திய இராணுவம் இலங்கையில் செய்த மனித உரிமை மீறல்களை இலங்கைத் தமிழர் மட்டுமல்ல சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களும் கண்டித்தன. தமிழர்கள் சர்வதேச மனித உரிமைகள் குழுக்கள் இதனை விசாரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆனால், இவை எதுவும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியின் செவிகளில் ஏறவுமில்லை. கண்ணில் படவுமில்லை. அதைப்பற்றி அவர் கவலைப்படவுமில்லை.

ஆனால், இன்று தேர்தல் களத்தில் வாக்கு வேட்டைக்காக மனித உரிமைகள் பற்றியும், சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்கள் பற்றியும் ராஜீவ் காந்தி பேசுகின்றார். ராஜீவ் காந்தியின் இந்தக் கோரிக்கை கொலைக் குற்றவாளி தன்னை நீதிபதியாக ஆக்கிக்கொள்வதற்கு சமனானதாகும்,

# தமிழ்ப்பாட நெறி கற்றல், கற்பித்தலில் ஏற்படும் பிரச்சினைகள்

கல்வியில் மொழி வகிக்கும் இடம் மிகவும் முக்கியமான தொன்றாகும். மொழி இன்றி ஏனைய பாடங்களைக் கற்பிக்க முடியாது. எத்துறையிலும் மொழிக்கு இடம் உண்டு. ஆனபடியால்தான் மொழியானது கல்வியின் பிரதான கருவியாகவும், அதுடன் கல்வியைப் பரப்பும் ஊடகமாகவும், உள்ளது. இக்கு முறையில் பிள்ளையின் ஆரம்பக் கல்வி நிலையில் இருந்து மொழியானது ஏதோ ஒரு வகையில் அவர்களது நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மொழியானது பிள்ளைகளால் திறம்படக் கற்கப்பட்டால்தான் அவர்கள் கல்வியில் மேல்நிலையை அடையலாம். இன்று பாடசாலைகளில் மொழிக் கல்வி கற்றல், கற்பித்தல் முறைகள் மிகவும் பிற்தங்கிய முறையை அடைந்துள்ளமை கவலைக்குரியது. தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள் தமிழ் மொழியை முறையாக எழுத, வாசிக்க, பேசுவதில் மிகவும் பின்தங்கியதோர் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய தேர் நிலை தொடர்ந்தும் நிலவுமானால் தமிழ்க்கல்வி வளர்ச்சி குன்றியதோர் நிலையை அடையும். எனவே மொழிக்கல்வியை வளர்த்தெடுக்கும் செயற்திறன் கல்விசார் நிறுவனங்கள் யாவும் முன்வர வேண்டும்.

இன்று தமிழ்மொழிப் பாடநெறி எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை நாம் கற்றல், கற்பித்தல் என்ற வகையில் இனங்காண முடிகிறது. அவற்றை ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு, இரேஷ்ட பிரிவுகளில் தனித்தனியாக எடுத்து நோக்கலாம்.

முதலில் நாம் ஆரம்பப் பிரிவில் பார்ப்போமானால் தாய்மொழிக் கல்வியில் மிகவும் கவனம் எடுத்துக் கற்பிக்கப்பட வேண்டியதோர் பருவம் இப்பருவம், இப்பருவமே மாணவர் கற்றலில் அடித்திவாரமாகும் எனவே இப்பருவத்தில் அளிக்கப்பட வேண்டிய மொழிக்கல்வி மிகவும் முக்கியமானது. ஆரம்பப் பிரிவில் உருப்பெழுத்தின்மை, சொற்பிழை, வாக்கிய அமைவு இன்மை, சுருத்தமைய எழுதவோ, வாசிக்கவோ இன்மை, இரசிக்கும் ஆற்றல் இன்மை, போன்ற குறைபாடுகளைப் பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. இக்குறைபாடுகளுக்கு பல காரணங்கள் உண்டு. ஆரம்பப் பிரிவில் இன்று தமிழ் மொழியைக் கற்பிக்கப் போதிய ஆசிரியர்களின்மை, பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் இல்லாமை, அத்துடன் பெரும்பாலும் பயிற்சிபெறாத ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் நிலை காணப்படுகிறது முன்னை காலங்களில் பண்டிதர்களும், தமிழ்ப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் கற்பித்து வந்த இடத்தை நிரப்புவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

பாடங்களைப் படித்துக்காட்டும்முறை, பாடல்களை கருத்துப்படக் கொண்டு கட்டிக்காட்டும் முறை. மனனம் செய்யவிருக்கும்முறைபோன்றவற்றில் இன்று அதிககவனம் செலுத்தாமை அத்துடன் பாடவிடயத்திற்கேற்றதுணை நூல்களைக் கற்பிக்காமை; உ-ம் ஆண்டு 9இல் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் பாடத்தைக் கற்பிக்கும்போது துணை நூல்கள் அவசியம் தேவைப்படுகின்றன; இலக்கணம் கற்பிக்கும்போது தன் நூல் தொல்காப்பியம் போன்ற இலக்கணநூல்கள் ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுவது குறைவு. சூத்திரங்களை மனனம் செய்விக்கும் பழக்கமின்மை. இவைபோன்ற


நா. தணிகாசலம்பிள்ளை

(M. A. In Ed.)

Dip-in Ed, Dip-in Educational Management

பாடசாலை முகாமைத்துவ ஆலோசனைகள் / கல்வி அதிகாரி,

கல்வித் திணைக்களம்,

யாழ்ப்பாணம்.


இவ்வாறான தற்போதைய வகுப்பறை மாணவர்களின் எண்ணிக்கை ஆரம்பப் பிரிவில் அதிகமாகக் காணப்படுவதால் ஆசிரியர் மொழிக்கல்வியில் தனிப்பட்ட கவனம் எடுக்க முடியாமல் இருக்கின்றது. ஆசிரியர்களில் அனேகமானவர்கள் திருத்தங்களை அவ்வளவு முக்கியமாகக் கருதுவதில்லை.

இடைநிலைப்பிரிவை எடுத்து நோக்கின் ஆரம்பப் பிரிவில் காணப்படும் அதே குறைபாடுகள் தொடர்ந்து காணப்படுவதுடன் கருத்தமைய வாக்கியம் அமைக்கமுடியாமை, பந்தி பிரித்து எழுத பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தத் தெரியாமை கட்டுரை, கடிதம் என்பனவற்றைச் சரியான முறையில் எழுதத் தெரியாமை போன்ற குறைபாடுகளை நோக்கலாம் மாணவர் மத்தியில் வாசிப்புப் பழக்க வழக்கம் அருகி வருகின்றது. "வாசித்தல் மனிதனைப் பூரண மனிதனாக்குகிறது" என்ப தற்கமைய பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுகதைகள், நாவல்கள், கதைகள் என்பவற்றை வாசித்தும் அறிவை பெருக்கிக் கொள்ள வேண்டும்.

இத்தகைய ஆர்வம் மாணவரிடம் மிகக் குறைவு.

மேலும் ஆசிரியர்கள் மொழி கற்பிப்பதில் பாரம்பரியமுறையில் கற்பிப்பது குறைவு; இவ்வாறு கருத்துப்படக் குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இரேஷ்ட பிரிவிலும் ஆரம்ப இடைநிலைப் பிரிவில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்ந்து காணப்படுகின்றன; இப்பிரிவில் கற்பிக்க போதிய மொழியாசிரியர்களின்மை, இலக்கணத்தைத் திறம்படக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் பற்றாக்குறை என்பன காணப்படுகிறது.

மேலும் மாணவர்கள் மத்தியில் தற்போது மொழிப் பாடநெறியை விரும்பிக் கற்கின்ற சூழ்நிலை அருகி வருகின்றது விரும்பிக் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் குறைவடைந்து வருகின்றனர். காரணம் நவீன கலைத் திட்ட அமைப்பாகும். அத்துடன் மொழிக் கல்வியைப் போதிப்பதில் இன்று பெற்றோரது பங்களிப்பும் குறைவடைந்து வருகின்ற நிலையைக் காணலாம்.

இவற்றுடன் கலைத்திட்டக் குறையாகும் மொழிக் கல்வியில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாகும்; மேலைத்தேய கலைத்திட்ட அமைப்பு பாடநூல் அமைப்பு முறையை எமது தாய்மொழியில் புகுத்தியமை. அத்துடன் சிக்கல் மொழி அமைப்பு முறையைப் பின்பற்றும்படி திணித்தமை, கலைத்திட்ட அமைப்பை அடிக்கடி மாற்றியமை போன்றவையாகும்.

(தொடரும்)

## வயோதிபர் இல்லம் நிறுவ ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஒய்வூதியக்காரர் சேமநிதிச் சங்கம் வயோதிபர் இல்லம் ஒன்றை நிறுவஉள்ளது ஆண்களுக்கும், பெண்களுக்குமென இருவேறு வயோதிபர் இல்லங்களை யாழ். மாவட்டத்தில் அமைக்க மேற்படி அமைப்புத் தீர்மானித்துள்ளது ஓய்வூதியக்காரரும், பாதுகாப்புத் தேவைப்படும் முதியவர்களும் இந்த இல்லங்களில் தங்கலாம்,

கைதடி வயோதிபர் இல்லத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி க. சுந்தரலிங்கம் தலைமையில் வயோதிபர் இல்லம் அமைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க உபகுழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த இல்லம் பரீட்சார்த்த முறையாக முதலில் நல்லூரில் நிறுவப்படவுள்ளது;

## பிரடறிக்கோட்டை மான்கள் அருகி வருகின்றன

(திருமலை)

திருமலை பிரடறிக் கோட்டையில் இருந்த மான்கள் தற்போது அருகி வருகின்றன. மூன்று பக்கமும் கடல்கள் சூழ்ந்த கோணேசர் மலைப் பகுதியில் பெருமளவு மான்கள் காணப்பட்டன. மன்னர் அகதிகளாகக் குடியேறியிருந்த சிங்களவர்களும் இராணுவத்தினரும் தமது உணவுத்தேவைக்கு பயன்படுத்தி வருவதனாலேயே மானினம் அருகி வருவதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை காலிப்பகுதியில் தற்போது கைவிடப்பட்டிருக்கிற டச்சுக் கோட்டையைபுனரமைக்கும் முயற்சிகளை அரசாங்கம்மேற்கொண்டுவருகிறது;

## ஐ. நா. அமைதிப்படை குவைத் சென்றது

(குவைத்)

குவைத் ஈராக் எல்லையை கண்காணிக்க அனுப்பப்படும் அமைதிப்படையின் முதலாவது தொகுதி குவைத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. அமைதிப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் குர்தாஷ் கிரைண்டல் மிகுதிப் படைகள் ஒரு சில தினங்களில் வந்து சேர்ந்துவிடும் எனத்தெரிவித்தார்

இதனிடையே மீதமுள்ள சுமார் எழுபதாயிரம் போர்க் கைதிகளும் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று சர்வதேச செஞ்சிலுவை அமைப்பு கூறியுள்ளது;

